# பொதுக்காலம் 29ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

அன்பிற்குரியவர்களே, பொதுக்காலம் 29ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமே நம்மிக்கையுடன் கூடிய ஜெபத்தில் அமைந்துள்ளது. நாம் மேற்கொள்ளும் ஜெபமும் தவமும் தானமும் நம் வாழ்விற்கு உரமூட்டுகின்றது. இறை உறவிலும் மனித உறவிலும் நம்மை வலுவானவர்களாக மாற்றுகின்றது. நம் தளரா முயற்சி வெற்றிக்கனியை எட்டிப் பறிக்க நமக்கு உதவி செய்கின்றது. ஏழை கைம்பெண்ணின் மன்றாட்டும் அவளின் விடாமுயற்சியும் அவளுக்கு வெற்றியை அளித்தது.

திருமுழுக்கு பெற்று, இறைவனின் சொந்த பிள்ளைகளாக வாழும் நாம் நம் நிலை என்னவென்று உணர்ந்து நம் தகுதிக்கேற்ப வேண்டும்பொழுது அபரிமிதமான நன்மைகளை பெற்றுக் கொள்கின்றோம். தன் நிலை உணர்ந்த நல்ல கள்வனின் ஜெயம் கேட்கப்பட்டது. அன்றே விண்ணகம் அவனுக்கு சொந்தமானது. நமது உழைப்பும் ஜெபமும் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்க செய்வோம்.

ஜெபமில்லா வாழ்வும் உழைப்பும் முழுமையான பலனைத் தருவதில்லை. எல்லாம் அவர் பார்த்து கொள்வார் என சோம்பித் திரிந்து விட்டு, என் ஜெபம் கேட்கப்படவில்லை என்பதில் பயன் என்ன? இறை வேண்டல் நாம் விரும்பும் அனைத்தையும் பெற்றுத்தர வல்லது. ஆனால் துன்ப வேளையில் சோர்ந்து போகாமல் இறைத் திருவுளத்தை ஏற்றுக் கொள்ள முற்படுகிறோமா? நமது ஜெபம் மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகவா? அல்லது கடவுளின் மாட்சிக்காகவா? சற்றே சிந்திப்போம். "கேளுங்கள் தரப்படும்" என்று சொன்னவரிடம், முழுநம்பிக்கையுடன் மனம் தளராமல் தொடர்ந்து ஜெபிப்போம்.

நாம் வேண்டியதைத் தர ஆவலோடு காத்திருக்கும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்புத் திருப்பலியில் ஒன்றிணைவோம். அன்பில் நிலைத்திருப்போம்.

**முதல் வாசக முன்னுரை: விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம் 17: 8-13**

இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து பேராற்றலோடு மோசேயின் மூலம் அழைத்து வந்த வல்லவராம் இறைவனின் பேரிரக்கத்தை நாம் இங்கு காண்கின்றோம். மோசே தன் கைத்தடியை உயர்த்தி ஜெபித்தார். அவரின் ஜெபம் இஸ்ரயேல் மக்களுக்கு வலிமையைத் தந்தது. நம்பிக்கையுடன் கூடிய நமது ஜெபம் நாம் கேட்பதற்கும் மேலான வரங்களை நமக்கு தர வல்லது. நம்பிக்கையில் சோர்ந்து விடாமல் நம்

மனங்களை இறைவனிடம் உயர்த்துவோம் இறைவார்த்தைகளை நம் வாழ்வாக்குவோம்.

## இரண்டாம் வாசக முன்னுரை: 2 திமொத்தேயு 3: 14- 4: 2

தூய ஆவியின் தூண்டுதலால் எழுதப்பட்ட விவிலியத்தை நமக்கு பரிசளித்தார் இறைவன். அது நம்மை கற்பிப்பதற்கும் கண்டிப்பதற்கும் சீராக்குவதற்கும் நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது என சான்று பகர்கிறார் புனித பவுலடியார். இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையால் நம்மை மீட்புக்கு வழிநடத்தும் ஞானத்தை அளிக்க வல்ல இறைவார்த்தைகளுக்கு செவிமடுப்போம். உயிரும் ஆற்றலும் நிறைந்த இறைவார்த்தையில் வாழ்வமைப்போம்

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. பேராற்றலும் இரக்கமும் கொண்டவரே எம் இறைவா!

உமது அருளாற்றலால் எம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவறத்தார் அனைவரும் நம்பிக்கையோடு தங்களை நாடிவரும் மக்களைச் சந்தித்து, ஏற்று உம் ஆற்றல் நிறைந்த வாரத்தைகளால் உம் மக்களை தேற்றுபவர்களாக விளங்க அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. எம்மை ஆட்சி செய்பவரே இறைவா!

பல்வேறு வாக்குறுதிகளையும் உறுதிமொழிகளையும் முறையாகத் தந்து எம்மை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள் ஆட்சியாளர்கள் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிகொடுப்பவர்களாகவும், மக்களின் முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நல் மனம் கொண்டவர்களாகவும் விளங்க அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் பாதையில் எம்மை வழிநடத்தும் எம் இறைவா!

எம் பங்கைச் சார்ந்த எல்லா குடும்பங்களையும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் உறவின் மேன்மையை உணர்ந்தவர்களாய் விட்டுக் கொடுத்து, அன்பு, அமைதி, சமாதானம், பொறுமை ஆகிய நற்பண்புகளால் நிறைந்தவர்களாய் வாழ வரம் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. உடனிருந்து எம்மைத் தேற்றுபவரான எம் இறைவா!

இன்றைய வாழ்க்கை சூழலில் எல்லாம் வணிகமயமான பார்வையாலும் ஒருவர் மற்றவரிடம் பேச, பழக, கருத்துக்களை பரிமாற வாய்ப்பில்லாமல், தவறாக வழிகாட்டும் தீயவர்களின் வலையில் சிக்காமலும், நம் தேவைகளை சந்திக்கின்றவர் நீர் ஒருவரே என்பதை நன்கு உணர்ந்தவர்களாய் என்றும் உம் வார்த்தைகளுக்கு அடிபணியும் மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. இரக்கம் நிறைந்தவரே எம் இறைவா!

எம் சமூகத்தில் ஆதரவின்றி தவிக்கும் கைம்பெண்களுக்காக மன்றாடுகின்றோம். கணவனை இழந்து துன்பப்படும் அவர்களது வாழ்வில் பொருளாதார தேவைகள் சந்திக்கப்படவும், சமூக பாதுகாப்புடன் பிள்ளைகளின் அன்பும், பராமரிப்பும் கிடைத்திடவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி: திருமதி. ஜெயின் வேலாயுதம், புளியரை, செங்கோட்டை மறைப்பணித்தளம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com